# மாணவி அனிதா நினைவு தினம்!

## தி.மு.க. மாணவரணி செயலாளர் திருமதி ஈரோடு வீரமணி அறிக்கை!

சென்னை, செப்.1-

மாணவி அனிதா நினைவு தினம் குறித்து தி.மு.க. மாணவர் அணி செயலாளர் திருமதி ஈரோடு வீரமணி அறிக்கை வருமாறு:-

நீட் போராளி அனிதா அவர்களின் நினைவேந்தலை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் நுங்கம்பாக்கம் முரசொலி அலுவலகம் அருகில் மாவட்ட கழக அலுவலகத்தில் காலை 10 மணி அளவில் அனிதா அவர்களது புகைப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்ய உள்ளோம்.

அது சமயம் தி.மு.க மாணவர் அணி சென்னை மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பகுதி கழக மாணவர் அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டு கொள்கிறோம்.

நீட் கொடுமைக்கு எதிரான தி.மு.க.வின் செயல்பாடுகளும்

இளைய தலைமுறையினருக்கான இளந்தலைவர் அவர்களின் போராட்டமும், 2017இல், அரியலூர் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த அனிதா, பன்னிரெண்டாம் வகுப்பில் 1,176 மதிப்பெண் பெற்றும் நீட் தேர்வால் மருத்துவக் கல்லூரி இருக்கை இழந்து உயிரிழந்தார். நீட்டிலிருந்து விலக்கு கோரி உச்ச நீதிமன்றம் வரை போராடிய அவரது தியாகம், தமிழக நீட் எதிர்ப்புப் போராட்டத்தின் குரலாக மாறியது. இந்நினைவு நாளில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நடவடிக்கைகளையும், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இப்போராட்டத்தில் ஆற்றிய பங்கையும் நினைவு கூர்வோம்.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நடவடிக்கைகள் அனிதாவின் மறைவின்போதே, கழகத் தலைவர் அவர்கள் அரியலூர் சென்று இறுதி மரியாதை செலுத்தி, குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்.

2021-இல் ஆட்சிக்கு வந்த பின், திராவிட மாடல் அரசு இந்த உறுதிமொழியை நிறைவேற்றியது:

நீட் விலக்கு மசோதா: 2021 செப்டம்பரில் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் தாமதப்படுத்தியபோதும் அரசு விடாப்பிடியாக இதற்கான சட்டப் போராட்டத்தைத் தொடர்ந்தது.

குடியரசுத் தலைவருக்கு கடிதம்: மசோதா தாமதம் மனஉளைச்சலுக்கும், தற்கொலைகளுக்கும் வழிவகுத்ததாக கழகத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி, கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றக் கோரினார்.

**அனிதா நினைவகம்:** அரியலூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 22 கோடியில் கட்டப்பட்ட அரங்கத்திற்கு அனிதாவின் பெயர் சூட்டப்பட்டது.

இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் களத்தில் நின்று வழிநடத்திய போராட்டம்.

பாதிக்கப்பட்ட மாணவர் ஜெகதீஸ்வரன் அவர்களின் இல்லம் சென்று அஞ்சலி செலுத்தி, நீட் விலக்கு கோரிக்கையை வலியுறுத்தினார்.

2023 ஆகஸ்டில் நீட் தோல்வியால் மாணவர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, கழக மாணவரணி மற்றும் மருத்துவரணி சார்பில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் நேரடியாகக் கலந்துகொண்டு, உயிரிழிந்த மாணவர் தன்னுடைய சகோதரன் போல என வருத்தம் தெரிவித்தார்.

50 லட்சம் மக்களை சென்றடையும் கையெழுத்து இயக்கத்தை கழக இளைஞரணிமாணவரணி வழியாக தலைமையேற்று நடத்தினார்.

நீட்டை தடுக்க மறுத்த ஆளுநரையும், ஒன்றிய அரசின் அணுகுமுறையையும் தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வருகிறார்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மாணவி அனிதா அவர்களின் வீட்டிற்கு சென்று தரையில் அமர்ந்தார் என்று பெருமை பீற்றிக் கொள்ளும் நிர்வாகத் திறனற்ற ஆளும் த.வெ.க. அரசு இந்த ஆண்டு (2026) மட்டும் நடந்த நீட் தற்கொலைகள் பற்றி பேசாமல் ஊமையாக இருப்பது ஏன்?

2026ல் நீட் மறுதேர்வால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட மாணவ செல்வங்கள் எஸ். அனுகீர்த்தனா (19) கோயம்புத்தூர், எஸ். கோபிகா (19) சேலம், ஆர். ரோஷினி (19) தர்மபுரி, சி. வெற்றி ஆனந்தன் (20) கிருஷ்ணகிரி

ஆகியோர் இல்லத்திற்கு சென்று தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகளும் கழக மாவட்ட செயலாளருடன் மாவட்ட நிர்வாகிகளும் அக்குடும்பத்துடன் தோளோடு தோள் கொடுத்து ஆறுதல் தெரிவித்தனர்.

மாநிலங்களவையில் மீண்டும் நோட்டீஸ்: கடந்த 23.07.2026 அன்று மாநிலங்களவையில் நீட் தேர்வை ரத்து செய்வது குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என தி.மு.க. மாநிலங்களவை குழுத் தலைவர் திரு. திருச்சி சிவா எம்.பி அவர்கள் மீண்டும் நோட்டீஸ் வழங்கினார். மேலும், 27.07.2026 அன்று ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு "பொது தேர்வுகள் (நியாய மற்ற வழிமுறைகளைத் தடுத்தல்) திருத்த மசோதா, 2026"ஐ கொண்டு வந்த போது, பத்திரிக்கையாளர்களிடம் பேசுகையில் வெறும் தேர்வு முறைகேடுகளைத் தடுக்கும் சட்டங்களை கொண்டு வந்தால் மட்டும் வினாத்தாள் கசிவும், மாணவர் தற்கொலைகளும் நிற்காது என்றும், நீட்டைத் தடை செய்வதே எங்கள் ஒரே கோரிக்கை" என்று அவர் தெளிவாகக் கூறினார்.

தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவரான கனிமொழி எம்.பி. அவர்கள் கடந்த 28.07.2026 அன்று ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு கொண்டு வந்த பொது தேர்வுகள் திருத்த மசோதா குறித்த மக்களவை விவாதத்தில், நீட் வினாத்தாள் கசிவு மற்றும் போராடிய மாணவர்கள் மீதான போலீஸ் நடவடிக்கை குறித்து மத்திய அரசை நேரடியாக விமர்சித்தார்.

மேலும் சமீபத்தில் கடந்த ஆகஸ்ட் 28 அன்று, திருநெல்வேலி பாளையங்கோட்டையில், கவுன்சிலிங் தேர்வுப் பட்டியலில் பெயர் இல்லாததால் ஷ்ருதிலயா (21) என்ற மருத்துவ மாணவி உயிரிழந்தார்.

இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போக, இந்த தற்குறி த.வெ.க அரசு இதைப் பற்றி எதையும் கண்டு கொள்ளாமல் ஒப்பந்தப் பணிகளை ரத்து செய்வதில் மட்டும் மும்முரமாய் இருப்பது ஏன்?

இந்த அனைத்து நீட் தற்கொலைகளிலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே உறுதுணையாக இருந்து வருகிறது என்பதே மறுக்க முடியாத உண்மை.

அனிதாவின் நினைவு சமூக நீதிக்கும், மாநில உரிமைக்கும், மாணவர் கல்விக்கான சம வாய்ப்புக்குமான போராட்டமாகும். கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமும், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் இப்போராட்டத்தை உறுதியுடன் தொடர்கின்றனர். "இனி ஒரு மாணவனும் நீட் காரணமாக உயிரிழக்கக் கூடாது" என்ற உறுதிமொழியுடன் தி.மு.க. மாணவரணி இப்போராட்டத்தைத் தொடரும்.

இவ்வாறு தி.மு.க. மாணவர் அணி செயலாளர் திருமதி ஈரோடு ஜெ.வீரமணி தெரிவித்துள்ளார்.

நே.சிற்றரசு தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை! டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை!

# மேத்தா நகர் கோ.நடராசன் இல்ல மணவிழா வரவேற்பு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் – உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, செப். 1-

கழக தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினர் மேத்தா நகர் கோ.நடராசன் - அஞ்சம்மாள் ஆகியோரின் பெயரனும், அண்ணாநகர் தெற்கு பகுதி பிரதிநிதி ந.செந்தில்குமார் - மீனாட்சி ஆகியோரின் புதல்வருமான ந.செ.விக்னேஷ்க்கும் திருவாரூர் மாவட்டம் - குடவாசல் வட்டம், ஏருர்ந்த வாடி நினைவில் வாழும் கு.கிருஷ்ணமூர்த்தி - விஜயமாலா ஆகியோரின் புதல்வி கி.அபிநயாவிற்கும் மணவிழா வரவேற்பு நாளை (2.9.2026 - புதன்கிழமை) மாலை 6 மணியளவில் சேத்துப்பட்டு, டாக்டர் குருசாமி சாலை, பச்சையப்பா கல்லூரி அருகில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. முன்னிலை வகிக்கிறார்.

முன்னாள் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பகுதிச் செயலாளர்கள் ந.இராமலிங்கம், ச.பரமசிவம் ஆகியோர்வரவேற்புரையாற்றுகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின், துர்கா ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் ஆர்க்காடு வீராசாமி, தயாநிதி மாறன் எம்.பி., டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆர்.எஸ்.பாரதி, மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, சோ.மா.இராமச்சந்திரன், மு.க.தமிழரசு, மு.சண்முகம், டி.கே.எஸ்.இளங்கோவன், எம்.கே.மோகன், அன்பகம் கலை, வெற்றி அழகன், நா.எழிலன், கார்த்திக் மோகன், ஆர்.கிரிராஜன், பி.வில்சன், மீ.அ.வைத்தியலிங்கம், ப.ரங்கநாதன், எஸ். ஆர்.ராஜா, இ.கருணாநிதி, காரம்பாக்கம் க.கணபதி, ஜோசப் சாமுவேல், தாயகம் கவி, பத்மநாபன், பூச்சி முருகன், துறைமுகம் காஜா, வரத கோ.ஆனந்த், வி.சுதாகர், சி.சேரன், வே.கௌதமன், டாக்டர் நா.சந்திரபாபு, ஆர். ராணி ரவிச்சந்திரன், எஸ்.ராம்குமார், ஏ.டி.முருகன், புரசை கோ.மணி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

107வது 'அ' வட்டச் செயலாளர் வி.எம்.சிவா நன்றி கூறுகிறார்.

## திருத்துறைப்பூண்டி அருகே 3 மாத காலமாக நீடிக்கும் குடிநீர்த் தட்டுப்பாடு!

# திருத்துறைப்பூண்டி - மன்னார்குடி சாலையில் காலிக்குடங்களுடன் மறியல்!

## அதிகாரிகளின் மெத்தனப்போக்கை கண்டித்து பொதுமக்கள் முழக்கம்!

திருவாரூர், செப்.1–

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே நீடிக்கும் குடிநீர்தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணாத அதிகாரிகளை கண்டித்து பாதிக்கப்பட்ட மக்கள் காலி குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மீனம்பநல்லூர், கீழபுத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 3 மாதங்களாக முறையாக குடிநீர் வழங்கப்படவில்லை என கூறப்படுகிறது. இது தொடர்பாக அதிகாரிகளிடம் பலமுறை புகார்கள் அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதிகாரிகளின் மெத்தனப்போக்கை கண்டித்தும், குடிநீர் வழங்க கோரியும் திருத்துறைப்பூண்டி – மன்னார்குடி சாலையில் காலிகுடங்களுடன் முழக்கங்களை எழுப்பியபடி சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது, திடீரென 3 பேர் மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.


